# 1 தெசலோனிக்கேயர் அறிமுகம்

Peter Evensen, CLC USA

## ஆசிரியர்

இந்த நிருபத்தின் ஆரம்பத்திலேயே பவுல் தன்னை இந்த நிருபத்தின் ஆசிரியர் என்று அறிமுகஞ்செய்துக் கொள்கிறார்:

> **1 தெசலோனிக்கேயர் 1:1** "பவுலும், சில்வானும், தீமோத்தேயும், பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக."

2ம் அதிகாரத்தில் தானே இந்த நிருபத்தை எழுதினதாக பவுல் சொல்கிறார்:

> **1 தெசலோனிக்கேயர் 2:18** "ஆகையால், நாங்கள் உங்களிடத்தில்வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம், பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்; சாத்தானோ எங்களைத் தடைபண்ணினான்."

## பெற்றுக் கொள்பவர்கள் மற்றும் பின்னணி

1ம் வசனத்தில் இந்த நிருபத்தை யாருக்கு எழுதினார் என்று பவுல் தெரியப் படுத்துகிறார். "தெசலோனிக்கேயர் சபைக்கு" தெசலோனிக்கேயா பட்டணம் ரோமாபுரி அரசாங்கத்து ஆதீனத்திற்கு உட்பட்ட மெசபதோமியா பிராந்தியத்தின் தலைநகராக இருக்கிறது.இங்கே ரோமாபுரி அதிகாரிகள் தங்களுக்கென்று வசிப்பிடங்களை ஏற்பாடு செய்து கொண்டனர். பைஜான்டியம் மற்றும் ரோமாபுரி பட்டனங்களை இணைக்கக்கூடிய மிக முக்கியமான போக்குவரத்து சாலையில் இந்த தெசலோனிக்கேயர் பட்டணம் இருக்கிறது. கற்றும் இது மிக முக்யமான துறைமுக பட்டணம். இது ஒரு நவீன கால தெசலோனிக்கேயா, கிரீஸ் ஆகா இருக்கிறது.

பவுல் இந்த தெசலோனிக்கேயாவை தன்னுடைய 2வது மிஷனரி பிரயாணம் வரைக்கும் பார்வையிடவில்லை. தன்னுடைய முதல் மிஷனரி பிரயாணத்தில் பம்புலியா மற்றும் பிஸிதாயவில் உள்ள மேற்கு மலைப் பிரதேசம் வரைக்கும் சென்று வந்தார்.

எருசலேமில் மூப்பர்களின் ஆலோசனைக் கூட்டத்திக்குப் பின்பு (அப்போ 15) தன்னுடைய முதல் மிஷனரி பிரயாணத்தில் பார்வையிட்ட சபைகளை மறுபடியும் பார்வையிட்ட சபைகளைமறுபடியும் பார்வையிட்டு அவைகளை உற்சாகப்படுத்தி பெலப்படுத்த நிச்சயித்துக் கொண்டார் (அப்போ 15:36). பவுல் பர்னபா இவர்களுக்கு இடையில் மாற்கு என்ற யோவான் குறித்து உண்டான விவாதத்தின் காரணமாக அவர்கள் பிரிந்து போயினர். (தம்முடைய முதல் பிரயாணத்திலேயே யோவான் அவர்களை விட்டு பிரிந்தான்). இதன் காரணமாக பவுல் பர்னபா இடையே விவாதம் உண்டாகி அவர்கள் பிரிந்து போனார்கள் பவுல் தனக்கு உதவியாக சீலாவை ஏற்பாடு செய்துகொண்டார். (சீலாவின் ரோமன் பெயர் சில்வான்). இவர்கள் இருவரும் சிரியா சிலிசியா பிரதேசங்களுக்கு தம்முடைய பிரயாணத்தை தொடர்ந்தார்கள். (அப்போ 15:38-41)

தெர்பை மற்றும் லீஸ்திராவில் அவர்கள் தீமோத்தேயுவைப் பற்றி தெரிதுக் கொண்டார்கள். தீமோத்தேயு விருந்தசேதனம் செய்துக் கொண்ட பின்பு பவுல் மற்றும் சீலா தீமோத்தேயுவை தங்களுடைய உடன் ஊழியராக தெரிந்துக் கொண்டு அவரோடு கலந்து தங்கள் பிரயாணத்தை தொடர்ந்தார்கள். அவர்கள் பார்வையிட்ட சபைகளை பெலப்படுத்தி எருசலேம் மூப்பர்களின் விசாரணை சபையில் எடுக்கப்பட்ட முடிவான தீர்மானங்களை எல்லா சபைகளுக்கும் தெரியப்படுத்தினார்கள். என்னவென்றால் நியாயப் பிரமான அநுசரிப்பில் இருந்து புறஜாதியார்கள் விடுவிக்கப்படுகிறார்கள் புறஜாதி கிறிஸ்தவர்கள் நியாயப் பிரமாணத்தை கடைபிடிக்க வேண்டிய அவசியமில்லை, அது யூதர்களுக்கு மாத்திரமே (**அப்** 16:1-5).

அவர்கள் கலாத்தியா மற்றும் பிரிக்கியாவைகளை பார்வையிட்ட பின்பு துரோவாவுக்கு சென்றார்கள். அங்கே மெசபடோமியாவிலிருந்து ஒரு நபர் தம்மை பார்வையிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாக பவுல் கனவு கண்டார். இதனால் அவர்கள் துரோவாவிலிருந்து சமுத்திரம் வழியாக மெசபடோமியாவின் முக்கிய பட்டணமான பிலிப்புக்கு வந்து அங்கே சில காலம் தங்கியிருந்தனர். இங்கே பிசாசு பிடித்து குரி சொல்லும் பெண்ணுக்கு சுகம் கொடுத்தார். அந்த பெண்ணின் எஜமானர்கள் பவுலையும், சீலாவையும் சிறைபிடித்து அவர்களை அடித்து சிறைசாலைக்கு ஒப்புக்கொடுத்தார்கள். விடுதலையான பின்பு அவைகள் அந்த பட்டணத்தை விட்டு போக வேண்டியிருந்தது. (அப்போ 16:6-39)

பவுலு, சீலா மற்றும் தீமோத்தேயு அம்போலியா மற்றும் அப்போல்னியா வழியாக தெசலோனிக்கேயா வுக்கு வந்தடைந்து அங்கேயிருந்த ஒரு யூதருடைய ஜெப ஆலயத்திற்கு வந்து சேர்ந்தார்கள்:

> **அப்போஸ்தலருடைய நடபடிகள் 17:2-9** "பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து, கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்தினான். அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம்பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து, பவுலையும் சீலாவையும் சேர்ந்துகொண்டார்கள். விசுவாசியாத யூதர்கள் வைராக்கியங்கொண்டு வீணராகிய சில பொல்லாதவர்களைச் சேர்த்துக்கொண்டு கூட்டங்கூடி, பட்டணத்தில் அமளியுண்டாக்கி, யாசோனுடைய வீட்டை வளைந்துகொண்டு, அவர்களைப் பட்டணத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டுவர வகைதேடினார்கள். அவர்களைக் காணாமல், யாசோனையும் சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டுவந்து: உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள். இவர்களை யாசோன் ஏற்றுக்கொண்டான். இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி, இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று கூக்குரலிட்டு, இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்களையும் பட்டணத்து அதிகாரிகளையும் கலங்கப்பண்ணினார்கள். பின்பு அவர்கள் யாசோனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் ஜாமீன் வாங்கிக்கொண்டு, அவர்களை விட்டுவிட்டார்கள்"

மேலே சொல்லப்பட்டவைகளின் மூலம் கவனித்து பார்க்கும் பொது தெசலோனிக்கேயா சபை அநேக பக்திமான்களையும், கிரீஸ் தேசத்தில் அநேகம் பெரும், கணம் பொருந்திய ஸ்திரீகளும்இருப்பதாக தெரிகிறது (அப்போ 17:4). யூதர்கள் கொஞ்சம்பேர் இருந்தபோதிலும் புரஜாதியினரை உடைய சபையாக தெசலோனிக்கேயா இருந்தது.

தெசலோனிக்கேயா சபையில் பவுலினுடைய மிஷனரி ஊழியத்தைப் பற்றின முக்கிய சாரம்சத்தை மாத்திரமே லூக்கா தன்னுடைய அப்போஸ்தலருடைய நடபடிகளில் விவரித்து இருக்கிறார். [பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்வது என்னவென்றால் பவுல் தெசலோனிக்கேயாவில்இருந்தபோது பிலிப்பு சபையைச் சேர்ந்தவர்கள் இரண்டுமுறை பவுலுக்கு உதவிகளை அனுப்பினார்கள்:

> **பிலிப்பியர் 4:16 "**நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள்."

இந்த உண்மை மற்றும் தெசலோனிக்கேயாவில் தன்னுடைய வேலையைக் குறித்து வவரித்ததை வைத்து பர்க்கும்போது (2:1-12) பவுலு இந்த தெசலோனிக்கேயாவில் கொஞ்சகாலம் இருந்ததாக இது நமக்கு காண்பிக்கிறது.

யூதர்கள் தெசலோனிக்கேயாசபையில் பிரச்சனைகளை உண்டாக்கியபோது சகோதரர்கள் பவுல்,சீலா மற்றும் தீமோத்தேயு இவர்கள் இரவோடு இரவாக தூரமாக பெரேயா பட்டணத்திற்கு அனுப்பினர் (அப்போ 17:10).

பெரேயாவில் கூட பவுல் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கின்றார் என்று தெசலோனிக்கேயாவில்உள்ள யூதர்கள் தெரிந்துக்கொண்டு அங்கே வந்து பெறேயாவில் கூட ஜன சமூகத்தை எழுப்பி கலவரப்படுத்தினார்கள். உடனடியாக பெரேயா சகோதரர்கள் பவுலை கடல் மார்க்காக ஏதென்ஸ் போகும்படி அனுப்பினார்கள். ஆனால் சீலாவும், தீமோத்தேயுவும் பெரேயாவிலேயேஇருந்து விட்டனர். பவுல் வழி அனுப்பும்படி வந்தவர்கள் அவரை ஏதென்ஸ் பட்டணம் வரைக்கும் கொண்டு வந்து, சீலாவும், தீமோத்தேயும் கூடுமான வரைக்கும் சீக்கிரமாக அவரிடத்தில் வரவேண்டும் என்று கட்டளை பெற்றுக் கொண்டு திரும்பி புறப்பட்டு போனார்கள் (அப்போ 17:13-15).

ஷீலா மற்றும் தீமோத்தேயு ஏதென்சில் பவுலுடன் கலந்து கொண்டார்கள். (இது அப்போஸ்தலர் நடபடிகளில் எழுதப்படவில்லையாயினும் 1தெச 3:1 பிரகாரம் இது நடந்தது) பிறகும் பவுல் தீமோத்தேயுவை எதென்ஸ்லிருந்து தெசலோனிக்கேயாவுக்கு அனுப்பினர். அது மாத்திரம் இல்லாமல் சீலாவை மெசபடோமியா மற்றும் பிலிப்பு பட்டணத்திற்கு அனுபினதாக சொல்லலாம். அது மாத்திரைன்றி தீமோத்தேயுவை தெசலோனிக்கேயாவிற்க்கு திரும்பி போகும் படி சொல்லி அங்கே ஊழியத்தை முடித்துக்கொண்டு கிரீஸ் தேசத்தில் ஜனியும் சீலாவையும் சேரும்படி ஒரு நிருபத்தில் எழுதினர்.

சந்தர்ப்பம் எதுவாயிருப்பினும் பவுல் ஏதென்ஸ்க்கு பிறகு கொரிந்துவுக்கு சென்றார். (அப்போ 18:1) பிறகு தீமோத்தேயு மற்றும் சீலா மெசபடோமியாவிலிருந்து பவுலை கலப்பதற்காக கொரிந்து வந்தடைந்தனர் (அப்போ 18:5). பவுலு கொரிந்துவில் ஒரு ற்றுடமும் ஆறுமாதம் காலம் கழித்தனர் (அப்போ 18:11).

## சந்தர்பம் மற்றும் உத்தேஷம்

பவுல் கொரிந்துவில் இருந்தபோதிலும் அவருடைய மனசெல்லாம் தெசலோனிக்கேய மீதே இருந்தது காரணம் அங்கே சபையை கட்டுவதற்கு அவரும் அவரோடு கூட அந்த சபையாரும் எவ்வளவோ சிரமங்களை எதிர்க்கொண்டார்கள். அதுமாத்திரமின்றி அங்கேயிருந்து அவர் பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட்டார். அது நிமித்தம் தெசலோனிக்கேயா சபை எப்படி இருக்கிறது என்பதை தெரிந்துகொள்வதற்காக பவுல் தீமோத்தேயுவை தேசலோனிக்கேயாவிர்க்கு அனுப்புகிறவராயிருந்தார்:

> **1 தெசலோனிக்கேயர் 2:17-20** "சகோதரரே, நாங்கள் இருதயத்தின்படி உங்களோடிருந்து, சரீரத்தின்படி கொஞ்சக்காலம் உங்களைவிட்டுப் பிரிந்திருந்தபடியினாலே, உங்கள் முகத்தைப்பார்க்கவேண்டுமென்று மிகுந்த ஆசையோடே அதிகமாய்ப் பிரயத்தனம்பண்ணினோம். ஆகையால், நாங்கள் உங்களிடத்தில்வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம், பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்; சாத்தானோ எங்களைத் தடைபண்ணினான். எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்; நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்."

> **1 தெசலோனிக்கேயர் 3:1-3** "ஆகையால், நாங்கள் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், அத்தேனே பட்டணத்தில் தனித்துவிடப்படுகிறது நன்மையென்று நினைத்து, இந்த உபத்திரவங்களினாலே ஒருவனும் அசைக்கப்படாதபடிக்கு உங்களைத் திடப்படுத்தவும், உங்கள் விசுவாசத்தைப்பற்றி உங்களுக்குப் புத்திசொல்லவும், நம்முடைய சகோதரனும் தேவ ஊழியக்காரனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எங்கள் உடன்வேலையாளுமாகிய தீமோத்தேயுவை அனுப்பினோம். இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே."

ஆசிரியர்கள் மற்றும் போதகர்கள் அந்த நாட்களில் பிரதானமான சாலைகளில் பிரயாணம் செய்வது பொதுவானதாயிருந்தது. இவ்விதமாக பிரயாணம் செய்யும் ஆசிரியர்கள் மற்றும் போதகர்கள் புகழ் மற்றும் பணம் அல்லது இரண்டையுமே ஆசைப்படுபவராக இருந்தனர். ஆனால் பவுல் அவ்விரண்டின் மேலும் ஆசையில்லாமல் சபைகளை கட்டினார். காரணம் பவுல் அப்படிவந்து சபைகளை கட்டி எழுப்பி இப்படி உடனடியாக திரும்பி சென்று விட்டார் ஆகவே ஒரு வேலை வேற்று உபதேச போதககள் தெசலோனிக்கேயாவுக்கு வந்து தான் போதித்த சத்தியத்தை திரித்து மாற்றி போதித்து தான் போதித்த சத்தியத்தை நிராகரித்து மற்றும் மறக்கச் செய்யப்படுமோ என்று பவுல் மிகவும் கவலையடைந்தார். அங்கே வந்த மற்றவர்கள் சத்தியத்தை "விற்பதற்கு" முயற்சி செய்தபோது சத்திய இருக்க வேண்டிய இடத்தில் அசத்தியம் (கள்ள போதனை) மாத்திரமே இருக்க அவகாசமிருக்கிறது.

ஆனால் தெசலோனிக்கேயாவிற்க்கு சென்று வந்த தீமோத்தேயு அங்குள்ள விசுவாசிகள் குறித்து நல்ல செய்தியை பவுலுக்கு சொன்னான். இதைப் பற்றி சந்தோஷமடைந்த பவுல் தான் போதித்த சத்தியத்தின் மேல் அவர்கள் வைத்த நிரந்தர விசுவாசம் மற்றும் அன்பைப் பற்றி அவர்களுக்கு நன்றி தெரிவித்து மற்றும் அந்த விசுவாசத்தில் அப்படியே இருக்க வேண்டும் என்றும் தேவனிடத்தில் விசுவாசம் வைக்க வேண்டும் என்றும் தெய்வ பத்தியுடன் கூடிய வாழ்க்கை வாழவேண்டும் மற்றும் உபத்திரவங்கள் எதிர்கொள்ள வேண்டும் என்றும் உற்சாகப்படுத்தி அவர்களுக்கு நிரூபங்களை எழுதி அனுப்பினார்.

ஆனால் உபத்திரவத்தில் மரித்த சில விசுவாசிகள் கடைசி காலங்கலைக் குறித்து தெசலோனிக்கேயாவினர் கலவரமடையக்கூடும் என்பதினால் பவுல் கர்த்தருக்குள் நித்திரையடைந்தவர்களை நாம் இழந்து போகவில்லை கடைசி நாளில் அவர்கள் நிச்சயமாக திரும்பவும் எழுதியிருப்பார்கள் என்று வாக்குதத்தம்செய்து இந்த நிரூபத்தை எழுதினர்.

## எழுதப்பட்ட காலம் மற்றும் சந்தர்ப்பம்

இந்த நிரூபமானது கி.பி.52ம் வருஷத்தில் கொரிந்துவில் தன்னுடைய 18 மாதம் தங்கியிருந்த காலகட்டத்தில் இதனை எழுதினர். பவுல் கொரிந்துவில் இருந்தபோது இரண்டு நிரூபங்கள் எழுதினர். முதலாவது காலத்தியருக்கு இரண்டாவதாக தெசலோனிக்கேயர்களுக்கு எழுதின முதல் நிரூபம்.

## நிரூபத்தின் உள்ளே அடங்கி உள்ள பொருளடக்கம்

இந் நிரூபத்தை இரண்டு பாகங்களாக பிரிக்க முடியும்:

## 1. தனிப்பட்ட விஷயங்கள் (1:1-3:13)

பவுல் இந்த நிருபத்தை தன்னுடைய சாதாரணமான சம்பிரதாய வாழ்த்துக்களுடன் ஆரம்பிப்பதாக மாத்திரம் இல்லாமல் தன்னுடன் கூட தீமோத்தேயு மற்றும் சில்வான் (சீலா) கூட இந் நிரூபத்தை எழுதுவதாக தெரியப்படுத்துகிறார்.

முதல் அதிகாரத்தில் வாழ்த்துக்களுடன் அவர்கள் அநேக உபத்திரவங்கள் எதிர்கொள்ள நேரிட்ட போதும் தேவனிடத்தில் அவர்கள் காட்டின விசுவாசம் மற்றும் அன்பு மற்றும் பொறுமையைக் குறித்து பவுல் தேவனுக்கு நன்றிசெலுத்தினான்.(1:5) இந்த தெசலோனிக்கேயா சபை மெசபடோமியா மற்றும் அகாயாவில் விசுவாசிகள் எல்லாருக்கும் மாதிரியாக இருக்கிறது (1:7) அது மாத்திரம் இல்லாமல் அவர்கள் விக்ரங்களை விட்டுவிட்டு, ஜீவனுள்ள சத்திய தேவன் பக்கம் திரும்பின விஷயத்தைக் கூட அந்த அதிகாரத்தில் எழுதினர்.(1:9) தேசலோநிக்கேயயாவில் மட்டும் இல்லாமல் ஒவ்வொரு இடத்திலும் தேவடதத்தில் உள்ள விசுவாசம் வெளிப்படுத்தப்பட்டது (1:8).

இரண்டாம் அதிகாரத்தில் தானும் சீலாவும் மற்றும் தீமோத்தேயுவும் கொண்டு வந்த செய்தியை மற்றும் தெசலோனிக்கேயர்களுக்கு இடையில் தன்னுடைய நடக்கையையும் தெசலோனிக்கேயர்களுக்கு நினைவூட்டினார். உபத்திரவப்பட்டு, அவமானப்பட்டு, எவ்வளவோ போராட்டங்களில் இருந்தபோதிலும் தெசலோனிக்கேயாவில் சுவிசேஷம் போதித்த காரியங்கள் நினைப்பூட்டினார் (2:2). மனுஷர்களை சந்தோஷப்படுத்துகிறவர்களாயிராமல் தங்களுடைய இருதயங்கள் சோதித்து பார்க்கின்ற தேவனை சந்தோஷப்படுத்தும்படி போதித்த காரியங்களை நினைப்பூட்டினார் (2:4). தெசலோனிக்கேயாவில் யாருக்கும் பாரமாக இருக்க கூடாது என்று இரவும் பகலும் கஷ்டப்பட்டு ஜீவனம் செய்து அவர்கள் உபத்திரவப்பட்டர்கள்.(2:9) அக்காரணத்தினால் தெசலோனிக்கேயர்கள் தேவனைக்குறித்து சுவிசேஷ செய்திகளை இவர்கள் மூலம் கேள்விப்பட்டு அங்கீகரித்தபோது, மனுஷர்களுடைய வார்த்தையாக கருதாமல் அது உண்மையாகவே இருக்கிறபடி தேவனுடைய வார்த்தையென்று அதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் (2:13). அதற்காக அவர்கள் விருப்பத்துடன் உபத்திரவப்பட்டார்கள் (2:14).

2:17-3:5 பாகங்களில் மறுபடியும் தெசலோனிக்கேயர்களை பார்ப்பதற்காக அவருக்கு இருந்த ஆவலை,விருப்பத்தை குறித்து பேசுகிறார். காரணம் தெசலோனிக்கேயாவிற்க்கு திரும்ப போகாமல் பவுல் மற்றும் அவருடைய உடன் ஊழியர்களை சாத்தான் சோதித்தான். அதற்காக பவுல் தெசலோனிக்கேயர்களை அவர்கள் கஷ்டங்களுக்கு மத்தியில் உற்சாகப்படுத்துவதற்கு சோதனைக்காரன் அவர்களை விசுவாத்தை விட்டு தூரம் போகும்படி செய்யாமலிருப்பதற்க்கு பவுல் அவர்களுக்கு இடையே தீமோத்தேயுவை அனுப்பி வைத்தார்.

3:6-10 பாகத்தில் தெசலோனிக்கேயர்கள் மத்தியிலிருந்து தீமோத்தேயுதிரும்பவும் பெற்ற சந்தோஷமான விஷயம் நல்ல செய்தி பவுல் எவ்வளவோ சந்தோஷத்தை கொடுத்தது. தெசலோனிக்கேயர்கள் கர்த்தரிடத்தில் நிலையாக நிலைத்திருபதைப் பற்றி அவைகள் விசுவாசம் பார்த்து பவுல் மிகவும் ஆறுதலடைந்தார்கள் (3:8).

பிதாவாகிய தேவன் மற்றும் கர்த்தராகிய இயேசு தம்மை மறுபடியும் தெசலோனிக்கேயாவுக்கு அனுப்ப வேண்டும் என்று பவுல் செய்த ஜெபத்துடன் மூன்றாம் அதிகாரம் முடிவடைகிறது. அது மாத்திரமில்லாமல் தேவன் தெசலோனிக்கேயர்களின் மத்தியில் இருந்த அன்பை மற்றும் அநேகரிடத்தில் தெசலோனிக்கேயர்களுக்கு உள்ள அன்பை தேவன் விருத்தியடையும்படி செய்ய வேண்டும் என்று இதன்மூலம் தெசலோனிக்கேயருடைய இருதயத்தை தேவன் இயேசுவினுடைய வருகை மட்டும் பரிசுத்தமாக வைக்குபடி பவுல் ஜெபம் செய்கிறார்.

## 2. மனப்பூர்வமான புத்தி மதி மற்றும் செய்யவேண்டிய வகைப் பற்றிய குறிப்புகள் (4:1-5:22)

4ம் அதிகாரத்தில் பவுல் ஒரு புதிய பிரிவை ஆரம்பிக்கின்றார். தீமோத்தேயு தெசலோனிக்கேயர்களை சந்தித்தபோது அவன் அவர்கள் மத்தியில் பார்த்த ஒரு சில விஷயங்களை, பிரச்சனைகளை இங்கே பவுல் ஒரு வேலை எழுதியிருக்க கூடும் அது மாத்திரமின்றி தெசலோனிக்கியர் தீமோத்தேயுவின் மூலம் பவுலுக்கு அனுப்பின ஒரு சில கேள்விகளுக்கு கூட இங்கே சமாதானம் எழுதினார்.

1 தெசலோனிகேயர் 4:1-6ல் பவுல் பரிசுத்தமுள்ளவர்களாக வாழவேண்டும் என்று அவர்கள் ஊக்கப்படுத்துகிறார். பால் சம்மந்தமான வேசிமார்க்கத்துக்கு விலகி இருக்கும்படி அவர்களுக்கு எச்சரிக்கை செய்கிறார், 1 தெச 4:7 – “தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திர்க்கே அழைத்திருக்கிறார்” ஒரு புற ஜாதி பின்னணியிலிருந்து வந்து மற்றும் ஒரு கிரேக்க துறைமுக பட்டணத்தில் வாழ்பவர்களுக்கு ஆண் பெண் இடையேயுள்ள பால் சம்மந்தமான பரிசுத்தமான வாழ்வு என்பது ஒரு புதிய கருத்தாக இருந்தது. தெசலோனிக்கியர்களுக்கு அவர்களுடைய பழைய பாவமான வழியை பின்னால் விட்டு விடுவது வெளிப்படையாக கஷ்டமானதாக இருந்தது.

4:9-12ல் பவுல் தெசலோனிக்கேயகளின் சகோதர அன்பை மெச்சிகொள்கிறார். அது மாத்திரமின்றி அன்பில் மிகவும் அதிகமாக விருந்தியடைகிறவர்களாய் இருக்க வேண்டும் என்று உற்சாகப்படுத்துகிறார். கூடவே வேறொரு மிக அதிகமாக மற்றும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பாக இருக்கவேண்டும் என்று உற்சாகப்படுத்தினார் (4:10). தெசலோனிக்கேயர்கள் அவர்கள் சொந்த வேலைகளைச் செய்துக் கொண்டு அமைதலான ஜீவியம் உடையவர்களாய் இருக்கவேண்டும் மற்றும் மற்றவர்கள் மேல் ஆதாரப்படாமல் தம்முடைய சொந்த கைகளினாலே வேலை செய்ய விரும்புகிறவர்களாக இருக்க வேண்டும் என்றும், பவுல் அவர்களை எச்சரிக்கின்றார் (4:12).

4:13-5:11ல் பவுல் மரணத்தைக்குறித்தும் மற்றும் கர்த்தராகிய இயேசுவினுடைய இரண்டாம் வருகைக்குறித்தும் பேசுகிறார். உபத்திரவத்தில் விசுவாசிகளின் மரணம் எவ்வளவோ கஷ்டத்தை கொண்டு வந்தது என்று பவுலுக்கு தெரியும். அதற்காகவே பவுல் தன்னுடைய இரண்டாம் நிரூபத்தில் அவற்றை ஒரு முக்கிய விஷயமாக சேர்த்து பேசுகின்றார் எபது தெரிகிறது. அதனால் பவுல் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களுடைய விஷயத்தை தெரிவிக்கும்போது இயேசுவினுடைய இரண்டாம் வருகையில் மரித்தோர்கள் அனைவரும் திரும்பவும் உயிரோடு எழுந்து பிறகு உயிரோடு இருக்கிற விசுவாசிகளுடன் கலந்து பரலோகத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று வாக்குத்தத்தம் தெரியப்படுத்தி அவைகளை ஆறுதல்படுத்தினான்.

“இரவு நேறத்தில் திருடன் வருகின்ற விதமாய் கர்த்தருடைய நாள் இருக்கும்” (5:2). இயேசுவினுடைய வருகையின் நாள் குறித்து தெரியப்படுத்தி அது சீக்கிரமாய் வரப்போகிறது ஆனால் நிச்சயமாக எப்பொழுது வருமோ தெரியாது ஆகவே அந்த நாளுக்காக ஆயத்தமாய் இருக்க வேண்டு தேவன் தெசலோனிக்கேயர்களுக்கு கொடுத்த இரட்சிப்பு விஷயமாக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று பவுல் அவர்களை உற்சாகப்படுத்தினான்:

> **1 தெசலோனிக்கேயர் 5:9-10** “தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார். நாம் விழித்திருப்பவர்களானாலும் நித்திரையடைந்தவர்களானாலும், தம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே.”

பிறகு பவுல் அவர்களுக்கு அவர்கள் கடை பிடிக்க வேண்டிய எச்சரிக்கைகளை போதித்தார். தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் கொண்டு வருபர்கள் அன்புடன் மிகுந்த கனத்துடன் அவர்களை நடத்த வேண்டும் என்று தெசலோனிக்கேயர்களுக்கு தெரியப்படுத்தி உச்சாகப்படுத்தினார் (5:12-13). இவ்வண்ணமாக அவர் அவர்கள் உற்சாகப்படுத்தினார்:

> **1 தெசலோனிக்கேயர் 5:13-21** “...அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள். மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள். ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள். எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆவியை அவித்துப்போடாதிருங்கள். தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.”

முடிவு: பவுல் ஜெபம் மற்றும் தேவன் நம்பத் தகுந்தவர் என்ற உத்திரவாதத்துடன் இந்த நிரூபம் முடிவடைகிறது:

> **1 தெசலோனிக்கேயர் 5:23-24** “சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம்முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.”

மேலும் தனக்காகவும் தன உடன் ஊழியக்காரர்களுக்காகவும் தெசலோனிக்கேயர் ஜெபிக்க வேண்டும் என்று பவுல் கேட்டுக்கொள்கிறார். அவர் அனுப்பி வைக்கின்ற இந்த நிரூபத்தை அவர்களில் ஒவ்வொருவரும் படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார். மேலும் ஒரு ஆசீர்வாதமான வசனத்துடன் இந்த நிரூபத்தை முடிக்கின்றார். 1தெ5:28, “நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக. ஆமென்.”

## சுருக்க வர்ணனை

1. அறிமுகம் (1:1)
2. தனிப்பட்ட காரனங்கள் (1:2-3:13)
3. மனப்பூர்வமான புத்தி மதி மற்றும் உச்சரிப்பு மற்றும் செய்ய வேண்டிய வகை பற்றி குறிப்புகள் (4:1-5:22)
4. முடிவு (5:23-28)